விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 6 வியாழன் 22.07.2021 மலர் - 2, இதழ் - 107




# பள்ளிகள் திறப்பது எப்போது?

விஜயபாரதம்

அரசாங்கங்களே, தயவுசெய்து பள்ளிகளைத் திறந்திடுங்கள் இல்லையெனில் ஒரு தலைமுறை பேரழிவு ஏற்படும் என யுனிசெஃப் அமைப்பு உலக நாடுகளுக்கு கோரிக்கை வைத்துள்ளது. 'குழந்தைகள் இளைஞர்கள் பள்ளிக்கு செல்லாததால் ஏற்படும் இழப்புகளை ஒருபோதும் ஈடுசெய்ய முடியாது. கற்றல் இழப்பு, மன உளைச்சல், மதிய உணவு கிடைக்காதது, ஆன்லைனில் படிக்க முடியாத சூழல், சமூகத்தில் பழக முடியாத சூழல்களால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். அது வன்முறை, துஷ்பிரயோகமாக வெளிப்படுகிறது. கொரோனா முற்றிலும் குறைந்தால்தான் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என்பதை ஏற்க முடியாது' என கூறியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானியான சௌமியா சுவாமிநாதன் 'பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், பெரியவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது, கொரோனா முன்னெச்சரிக்கையை கடைபிடிப்பது, தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற செயல்களால் பள்ளிகளை பாதுகாப்பாக திறக்க முடியும். ஆன்லைன் கல்வி மற்றும் மதிய உணவு பற்றாகுறையால் சுமார் 150 மில்லியன் குழந்தைகள் பள்ளி படிப்பில் இருந்து வெளியேறுகிறார்கள், இது பெரிய பாதிப்பு' என கூறியுள்ளார்.

அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகமான எய்ம்ஸ் இயக்குனர் டாக்டர் ரன்தீப் குலேரியா, 'கொரோனா தாக்கம் குறைவாக உள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், தமிழகம், புதுவை, ஒடிசா, குஜராத், ஹரியானா, பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்கள் மீண்டும் பள்ளிகள் திறப்பதை குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தக வெளியீடு



விஜயபாரதம்

ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கத்தின் தலைவர் டாக்டர் மோகன் பாகவத் அசாமில் உள்ள ஸ்ரீமந்தா சங்கர்தேவ் காலாக்ஷேத்திரா என்ற அரங்கில் பேராசிரியர் நானி கோபால் மகாந்தா எழுதிய 'Citizenship Debate over NRC & CAA: Assam and the Politics of History' (என்.ஆர்.சி & சி.ஏ.ஏ குறித்த குடியுரிமை விவாதம்: அசாம் மற்றும் வரலாற்றின் அரசியல்) என்ற நூலை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், அசாம் முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் குவாஹாத்தி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பி.ஜே. ஹண்டிக் ஆகியோர் கலந்து கொண்டனர். சேஜ் இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ள இந்த புத்தகம், நானி கோபால் மகாந்தாவின் கடந்த ஏழு ஆண்டுகளின் ஆராய்ச்சி பணிகளின் விளைவு. பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மிகப்பெரிய அவண காப்பக ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

# வந்தவாசியில் கல்வெட்டு கண்டுபிடிப்பு

வந்தவாசியை அடுத்த ராம சமுத்திரம் கிராமத்தில் உள்ள பாறையில் முதலாம் பராந்தக சோழர் கால கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. 1078 ஆண்டுகளுக்கு முன்பு, சாத்தனூர் ஏரி பராமரிப்புக்காக 'காடிவாய் நாழி நெல்' குறித்து கல்வெட்டு வாசகங்கள் கூறுகின்றன. 'ஒரு களம் நெல் விளைந்தால், ஒரு நாழி நெல் வீதம் ஏரி பராமரிப்புக்கு வரியாக கொடுக்க வேண்டும்' என்பது அதன் பொருள். மேலும், 'இந்த தர்மத்தை ரட்சித்தவர்களின் திருப்பாதம் என் தலைமேல். இத்தர்மத்தை இறக்குபவர்கள் கங்கையிடை, குமரியிடை, எழுநூற்று காதம் இடையே செய்பவர்கள் பாவத்தில் போகக் கடவர்கள்' என எழுதப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# கிருமி தொற்றுகளை அழிக்கும் பெட்டகம்

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த குப்பநத்தம் அரசு உயர்நிலை பள்ளியின் மாணவி சத்யா, அறிவியல் ஆசிரியர் தமிழ்கனி வழிகாட்டுதலுடன் புற ஊதா கதிர் விளக்கை பயன்படுத்தி, 7 விநாடிகளில் ரூபாய் நோட்டு உள்ளிட்ட பொருட்களில் உள்ள கிருமி தொற்றை அழிக்கும் சிறிய மரப்பெட்டகம் ஒன்றை 1,500 ரூபாயில் வடிவமைத்துள்ளார். அதனுள்ளே புற ஊதா விளக்கும் அதன் ஒளியை நான்கு புறமும் எதிரொளிக்க முகம் பார்க்கும் கண்ணாடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதில் ரூபாய் நோட்டுகள் மட்டும் இல்லாமல் பிஸ்கெட், காய்கறி உள்ளிட்ட பொருட்களை உள்ளே வைத்தால், அவற்றின் மீது படர்ந்துள்ள கிருமி தொற்றுகள் அழிக்கப்படும். நமது தேவைக்கு ஏற்ப பெரிய வடிவிலும் பெட்டியை வடிவமைக்கலாம்' மாணவி சத்யா தெரிவித்தார்.



விஜயபாரதம்

# ஹெச்.சி.எல் ஷிவ் நாடார் ராஜினாமா



விஜயபாரதம்

ஹெச்.சி.எல். நிர்வாக இயக்குநராக இருந்த ஷிவ் நாடார், தனது பதவியை ராஜினாமாசெய்துள்ளார். இவரது ராஜினாமா உடனடியாக அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இயக்குநர் குழுவின் ஆலோசகராக ஷிவ் நாடார் தொடருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது பதவி விலகலைத் தொடர்ந்து தற்போதைய தலைமைச் செயல் அதிகாரி விஜயகுமார் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அவர் இப்பதவியில் தொடர்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டே நிறுவனத்தின் தலைவர் பொறுப்பில் இருந்து ஷிவ் நாடார் விலகினார். அந்த பொறுப்பில் கடந்த ஓர் ஆண்டாக இவரின் மகள் ரோஷினி நாடார் மல்ஹோத்ரா இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெட்ரோல் டீசல் மீதான வரி

மாநிலங்களவையில் பெட்ரோல் டீசல் மீதான பல்வேறு வரிகளால் ஏற்பட்டுள்ள விலை உயர்வை குறைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, ‘பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரி, தற்போதைய நிதி நிலையை கருத்தில் கொண்டு, உட்கட்டமைப்பு, பிற மேம்பாட்டு செலவினங்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது. பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் 2010 முதல் சந்தை விலை நிலவரத்தை ஒட்டியே பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களால் நிர்ணயம் செய்யப்படுகிறது’ என கூறினார். மேலும், ‘சி. ஜி.எஸ்.டி சட்டத்தின் பிரிவு 9 (2) இன் படி, பெட்ரோல் டீசலை ஜி.எஸ்.டியில் சேர்ப்பதற்கு ஜி.எஸ்.டி கவுன்சிலின் பரிந்துரை தேவைப்படுகிறது. ஆனால், இதுவரை நடைபெற்ற ஜி.எஸ். டி கவுன்சில் கூட்டங்களில் எந்த ஒரு மாநிலமும், பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி.யில் சேர்க்க பரிந்துரைக்கவில்லை’ என்பதையும் தெரிவித்தார்.

விஜயபாரதம்



# மூவரில் இருவருக்கு நோயெதிர்ப்பு சக்தி

கொரோனா நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உருவாகி உள்ளதா என்பதை அறிய, 'செரோ டெஸ்ட்' எனப்படும் பரிசோதனையை இந்திய மருந்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) மேற்கொண்டது. இதுவரை பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 28,975 மக்களிடமும் 7,252 சுகாதார பணியாளர்களிடமும் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்த பரிசோதனை அறிக்கையை ஐ.சி.எம்.ஆர் வெளியிட்டுள்ளது. அதன்படி, 'பாரதத்தின் மக்கள் தொகையில், 6 வயதுக்கு மேற்பட்ட 68 சதவீதம் பேருக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி உடலில் உருவாகியுள்ளது. 40 கோடி மக்கள் எளிதில் தொற்று பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர். சுகாதாரப் பணியாளர்களில் 10ல் ஒருவர் தடுப்பூசி போடவில்லை. எனவே, மக்கள் கொரோனா தடுப்பு நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். கூட்டம் கூடும் இடங்களுக்கு செல்வது, தேவையற்ற பயணங்களை தவிர்க்க வேண்டும். இரண்டு டோஸ் தடுப்பூசி போட்டவர்கள் பயணம் செய்யலாம். குழந்தைகளுக்கு கொரோனா பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே, பள்ளிகளில் பணிபுரிபவர்கள் அனைவரும் தடுப்பூசி போட்ட பிறகு பள்ளிகளை திறக்கலாம். அதுவும், முதலில் ஆரம்ப பள்ளிகளை திறப்பதே சிறந்தது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்

# ஓ.பி.சி. சான்றிதழ்



விஜயபாரதம்

அரசுப்பணி, அரசு கல்வி நிறுவனங்களில் ஓ.பி.சி. பிரிவினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது. அதற்கான ஜாதி சான்றிதழை வழங்கும்போது அவர்களின் ஊதியம், வேளாண் வருமானம் ஆகியவற்றை கணக்கில் கொள்ள வேண்டாம் என மத்திய அரசு அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ள தமிழக அரசு, மாவட்ட கலெக்டர்களுக்கு இது குறித்து ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், 'மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, ஆண்டு வருமானம் 8 லட்சமாக இருந்தாலும், ஓ.பி.சி. பிரிவினருக்கான ஜாதி சான்றிதழை தடையின்றி வழங்க வேண்டும்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை

கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தைக் கடந்துள்ளது. தற்போது சேர்ந்த மாணவர்கள் மொத்தம் 1,01,757 பேரில் 27,311 பேர் புதியவர்கள். அதில் 19,038 மாணவர்கள் தனியார் பள்ளியில் இருந்து வந்து சேர்ந்தக்வர்கள். மாணவர் சேர்க்கை தொடர்வதால் இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கொரோனா பொதுமுடக்கத்தால் ஏற்பட்ட வேலை இழப்பு, தனியார் பள்ளிக் கட்டண கெடுபிடி போன்ற காரணங்களால் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாக கல்வித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்



விஜயபாரதம்

அதிமுக முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி வெளியிட்ட அறிக்கையில், 'தேர்தலின்போது, மின் பயன்பாட்டு கணக்கெடுப்பு மாதம் ஒருமுறையாக மாற்றி அமைக்கப்படும் என தி.மு.க வாக்குறுதி அளித்தது. ஆனால், அதை செயல்படுத்தவில்லை. ஜூலை 1ல் எடுக்க வேண்டிய மின் அளவீடு எடுக்கப்படவில்லை. 2019 மார்ச் மாத கட்டணத்தை செலுத்த கூறுகின்றனர். இதனால் குறைவான மின்சாரத்தை உபயோகித்தாலும் அதிக கட்டணம் செலுத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதிக கட்டணத்தால் பெண் தற்கொலை முயற்சி என செய்திகள் வருகின்றன. தோராய கணக்கீட்டில் ஆன்லைனில் கட்டணம் அனுப்பப்படுகிறது. அதை வைத்து அதிக மின்சாரம் பயன்படுத்தியதாக டெபாசிட் உயர்த்தப்படுகிறது. 2 மாத தி.மு.க ஆட்சி மீண்டும் மக்களை இருளில் தள்ளியுள்ளது. கடந்த சில நாட்களாக பல மாவட்டங்களில் பல மணி நேரம் மின்சாரம் இல்லை. மின் கட்டணமும் 2 முதல் 3 மடங்கு அதிகமாக வசூலிக்கப்படுகிறது. ஊரடங்கு காலத்தில் மக்கள் வருமானம் இல்லாமல் தவிக்கையில், இந்த செயல்கள் மக்களை பாதிக்கும். மின்வாரியத்தின் நிர்வாகத் திறனற்ற செயல்களை வன்மையாக கண்டிக்கிறேன்' என அவர் தெரிவித்தார்.

# என்.ஹெச்.ஆர்.சி அறிக்கை கசிவு



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிவுக்கு பிறகு மமதா பேனர்ஜி தலைமையிலான திருணமூல் கட்சியினர் நிகழ்த்திய வன்முறை வெறியாட்டங்கள் தொடர்பான தேசிய மனித உரிமைகள் ஆணையம் (என்.எச்.ஆர்.சி) அறிக்கை இணையதளத்தில் வெளியானது. இதனை எதிர்த்து கருத்து கூறிய மேற்குவங்க முதல்வர் மமதா பேனர்ஜி, இது பா.ஜ.கவின் அரசியல் சதித்திட்டம், அறிக்கை இணையதள ஊடகங்களில் கசியவிடப்பட்டது நீதிமன்ற அவமதிப்பு என குற்றம் சாட்டினார். அதனை என்.எச்.ஆர்.சி திட்டவட்டமாக மறுத்தது. இதனிடையே இது குறித்து கருத்து தெரிவித்த மேற்கு வங்க ஆளுநர் ஜகதீப் தங்கர், கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வன்முறை குறித்தான இந்த இறுதி அறிக்கை, நீதித்துறையின் உத்தரவின் பேரிலேயே வெளியிடப்பட்டது என விளக்கம் அளித்துள்ளார்.




விஜயபாரதம்

கடந்த ஆண்டு பிப்ரவரியில் வடகிழக்கு டெல்லியில் நடந்த சி.ஏ.ஏ எதிர்ப்பு போராட்டம் என்ர பெயரில் முஸ்லிம்கள் திட்டமிட்டு நடத்தியட வன்முறைகள் கலவரம் தொடர்பான வழக்கில், ஆசிப் என்பவரின் கடையை சுரேஷ் பதுரா என்பவர் சூறையாடியதாக காவல்துறைக்கு பொய்யாக ஒரு புகார் அளிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதனை சுரேஷ் பதுரா திட்டவட்டமாக மறுத்தார். இந்த வழக்கு தொடர்பான வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில், நீதிமன்றம் 'சுரேஷ் மீது சுமத்தப்பட்ட புகாருக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை, அது ஆசிப்பின் சொந்தக் கடை அல்ல, அது பகதூர்சிங் என்பவருக்கு சொந்தமானது. இது போன்ற ஆசிப்பின் பல பொய்யான வாக்குமூலங்கள், காவல்துறையின் அரைகுறை சாட்சிகள், சமர்ப்பிக்கப்பட்ட முன்னுக்குப்பின் முரணான ஆதாரங்கள் காரணமாக சுரேஷ் இவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்படுகிறார்' என தீர்ப்பளித்தது.

# கங்கனா ரனாவத் குற்றச்சாட்டு



விஜயபாரதம்

இணையத்தில் ஆபாச படங்களை தயாரித்து வெளியிடுவது தொடர்பான வழக்கில் பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவரும் தொழிலதிபருமான ராஜ் குந்த்ரா கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். இது குறித்து கருத்து தெரிவித்த மற்றொரு பாலிவுட் நடிகையான கங்கனா ரனாவத், 'இதுதான் பாலிவுட்டின் அடிப்பகுதி. இங்கு இப்படிதான் பல காலமாக நடக்கிறது. இது பாலிவுட் அல்ல 'புல்லிவுட்'. ஜாவேத் அக்தர், கரண் ஜோஹர் போன்றோரும் பாலிவுட்டை சீரழிக்கின்றனர். திரைத்துறைக்கென்று ஒரு வலுவான மதிப்பு, மனசாட்சி தேவை' என்று தெரிவித்துள்ளார். முன்னதாக, பாலிவுட் நடிகைகள் பூனம் பாண்டே, ஷெர்லின் சோப்ரா ஆகியோர் ராஜ் குந்த்ராவின் காரணமாகத்தான் பாலியல் சம்பந்தப்பட்ட படங்களில் நாங்கள் மாட்டிக்கொண்டோம் என கருத்து தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜாதிவாரி கணக்கெடுப்பு

மக்களவையில் ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த கேள்வி ஒன்றுக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்து மூலம் அளித்த பதிலில், 'நாடு முழுவதும் விரைவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. மகாராஷ்டிரா, ஒடிசா மாநில அரசுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதிவாரியான விவரங்களை சேகரிக்கக் கோரியுள்ளன. எஸ்.சி, எஸ்.டி பிரிவினரின் மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் மக்களவையிலும் மாநில சட்டப்பேரவைகளிலும் இடம் ஒதுக்க வேண்டும் என்று பாரதத்தின் அரசியல் சாசனப் பிரிவு கூறுகிறது. இந்த பிரிவுகள் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மட்டுமே ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். வேறு எந்த பிரிவினரையும் ஜாதிவாரியாக கணக்கெடுக்கப்போவதில்லை என மத்திய அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது' என தெரிவித்துள்ளார்.

விஜயபாரதம்



# முன்னாள் அமைச்சரின் மனைவிக்கு வாரண்ட்



விஜயபாரதம்

முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தலைவருமான சல்மான் குர்ஷித்தின் மனைவியான லூயிஸ் குர்ஷித், 'டாக்டர் ஜாகிர் உசேன் மெமோரியல் டிரஸ்ட்' என்ற தொண்டு நிறுவனம் சார்பாக ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள் கொடுப்பதாக் கூறி, மத்திய அரசின் மானியமாக ரூ. 71 லட்சத்திற்கும் அதிகமான பணத்தை முறைகேடாக பெற்றார். கூறியபடி எந்த முகாமையும் அவர் நடத்தவில்லை. மேலும், இதற்காக உத்தரபிரதேச அரசின் சில மூத்த அதிகாரிகளின் கையொப்பங்களையும் முத்திரைகளையும் மோசடியாக இதற்கு பயன்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டது. இதனை குர்ஷித் தம்பதிகள் மறுத்தனர். இது தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட்து. இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம், லூயிஸ் குர்ஷித், அறக்கட்டளை செயலாளர் அதர் பாரூக்கி ஆகியோருக்கு ஜாமீனில் வெளிவரமுடியாத வாரண்ட் பிறப்பித்துள்ளது.

# சர்ச்சையில் வனத்துறை அமைச்சர்



கேரளாவில் காங்கிரஸ் பிரமுகர் ஒருவரின் மகள் அப்பகுதி காங்கிரஸ் யுவ மோர்ச்சாவில் பொறுப்பு வகித்தார். மேலும், அந்த பெண் காங்கிரசில் இருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்தார். கடந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்பு தேர்தலில் பா.ஜ.க வேட்பாளராகவும் போட்டியிட்டார். அவரிடம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி. பத்மாகரன் என்பவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். மேலும், பா.ஜ.க உங்களுக்கு பணம் கொடுத்ததா, அதை நானும் தருகிறேன் என பேசியுள்ளார். இதனால் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வழக்கில் இருந்து அவரை பாதுகாக்கும் நோக்கில் கேரளாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த வனம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. சசீந்திரன் செயல்படுகிறார் என குற்றம் சாட்டப்படுகிறது. இதனை கண்டித்துள்ள கேரள பா.ஜ.க, அமைச்சர் சசீந்திரன் உடனடியாக ராஜினாமா செய்யவேண்டும் என கோரிக்கை வைத்துள்ளது.

# புத்தகம் எழுதியவருக்கு கொலை மிரட்டல்





விஜயபாரதம்

பிரபல பொது அறிவுஜீவி, கல்வியாளர் மற்றும் கேரள பா.ஜ.க துணைத் தலைவர் டாக்டர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் 'லவ் ஜிஹாத்' என்ற புத்தகம் எழுதியுள்ளார். இதனால் அவருக்கு ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து தொடர் கொலை மிரட்டல்கள் வந்துள்ளன. இது குறித்து அவர் காவல்துறையில் இது குறித்து புகார் அளித்துள்ளார். அவர் எழுதிய இந்த புத்தகம் 'லவ் ஜிஹாத்' குறித்த ஆய்வின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. இதற்காக குர்ஆனிலிருந்து விரிவான பல மேற்கோள்கள் இப்புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. சௌதி அரசின் அதிகாரபூர்வ மத அதிகார அமைப்பால் இப்புத்தகம் வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆம்னெஸ்டிக்கு தடை முதல்வர் கோரிக்கை



விஜயபாரதம்

பாரதத்தின் ஜனநாயக கட்டமைப்பு மற்றும் அதன் தலைமைக்கு எதிராக ஆம்னெஸ்டி அமைப்பு நீண்ட நாட்களாக சதி செயலில் ஈடுபட்டு வருகிறது. நமது நாட்டிற்கு அவப்பெயர் ஏற்படுத்தவும், இடையூறு செய்யவும் முயலும் அந்த அமைப்பை தடை செய்ய வேண்டும். பாரதத்திற்கும் பிரதமர் மோடிக்கு எதிராகவும் அவதூறு ஏற்படுத்த இடதுசாரி பயங்கரவாதத்தை ஆம்னெஸ்டி ஆதரிப்பது அனைவருக்கும் தெரியும். இது சர்வதேச சதி. பாரதத்தில் வாழும் சமூகங்களுக்கு இடையே பிரிவு ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கம்' என அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வாஸ் சர்மா கூறினார்.

# ராணாவை நாடு கடத்தலாம்

மும்பை தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதி தஹாவூர் ராணாவை பாரதத்திற்கு நாடு கடத்த அமெரிக்காவில் நடைபெறும் வழக்கில், அமெரிக்க அரசு சார்பில் ஆஜரான அட்டார்னி ஜெனரல், 'மும்பை தாக்குதலில் ராணாவுக்கு நெருங்கிய தொடர்புள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. பாரதத்திற்கு ராணாவை நாடு கடத்துவதற்கு தேவையான அனைத்து காரணங்களும் சரியாக உள்ளன. அதனால் அவரை நாடு கடத்த உத்தரவிட வேண்டும்' என தெரிவித்துள்ளார். எனவே, அமெரிக்க நீதிமன்றம் இது குறித்த உத்தரவை வெளியிடும்பட்சத்தில் அவர் உடனடியாக பாரதத்திற்கு நாடு கடத்தப்படுவார் என தெரிகிறது.



விஜயபாரதம்

# பாரதத்தின் தேசிய பழம்

பழங்களின் அரசன் மாம்பழம். முக்கனிகளில் இதற்குதான் முதல் இடம். அதிக வாசனையுடன், சுவை, மருத்துவக் குணம் நிறைந்தது மாம்பழம். மாம்பழம் உலகின் வெப்ப மண்டலப் பகுதிகளில் அதிகம் விளையும். மாங்கனி உற்பத்தியில் நமது பாரதம் முதலிடத்தில் உள்ளது.



விஜயபாரதம்

உலகில் பாதியளவு மாம்பழம் இங்குதான் விளைகிறது. முன்னூறுக்கும் அதிகமான ரகங்கள் இதில் உள்ளன. இதுதான் நமது தேசியக் கனி என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நமக்கு மட்டுமல்ல, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கும்தான். வங்கதேசத்தின் தேசிய மரம் மாமரம்தான்.

முக்கனிகள் சங்கமிக்கும் காலமும் இதுதான். மாங்கனிக்கு ஆன்மிகத்திலும் ஒரு முக்கிய இடமுண்டு. முருகன் தாய் தந்தையிடம் கோபித்துக்கொண்டு பழனி மலையேறி அமர்ந்ததன் காரனம் ஒரு மாங்கனிதான். காரைக்கால் அம்மையாரின் தெய்வீக ஆற்றலை போற்றும் விதமாக வருடந்தோறும் மாங்கனி திருவிழா ஹிந்துக்களால் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

பஞ்ச பூத ஸ்தலங்களில் மண் ஸ்தலமாக விளங்கும் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் சுமார் 3,500 ஆண்டுகளுக்கு முந்தைய ஒற்றை மாமரம் உள்ளது. நான்கு வேதங்களை நான்கு கிளைகளாகக் கொண்ட இத்தெய்வீக மாமரம் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய நால்வகைச் சுவைகளை கொண்ட கனிகளைத் தருகிறது.

தேங்காயை போலவே மாங்காயையும் தட்டிப் பார்த்து வாங்க வேண்டும். தட்டும்போது சத்தம் குறைந்திருந்தாலோ, கேட்கவில்லை என்றாலோ அழுகியது அல்லது அதிகம் கனிந்ததாக இருக்கலாம். இயற்கையான கறுப்புப் புள்ளிகள் இல்லாத பழங்கள் செயற்கை முறையில் கனிய வைக்கப்பட்டவை. மாம்பழத்தின் உள்ளே காணப்படும் ஆரஞ்சு, சிவப்பு கலந்த நிறம் இயற்கையானது. வெறும் மஞ்சள் நிறப் பழம் ரசாயனத்தால் பழுக்கவைக்கப்பட்டதாக இருக்கலாம். மேலே தெளிக்கப்பட்ட ரசாயனம், பூச்சி மருந்தை நீக்க எந்தப் பழமாக இருந்தாலும் இரண்டு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நன்கு கழுவ வேண்டும். பழத்தோலில் சத்துக்கள் இருக்கும்தான். ஆனால், அதே தோலில்தான் அதை பழுக்கவைக்க அடிக்கப்படும் மருந்துகளும் இருக்கும். எனவே, கடைகளில் கிடைக்கும் பழங்களின் தோலை நீக்கி சாப்பிடுவதே சிறந்தது.

இன்று தேசிய மாங்கனி தினம்

சங்கீதா சரவணகுமார்

# பை அப்ராக்ஸிமேஷன் டே

**பை** (π) என்பது கணக்குத்துறையில் மிக அடிப்படையான சிறப்பு எண்களில் ஒன்று. ஒரு வட்டத்தின் சுற்றளவு (பரிதி), அதன் விட்டத்தைப்போல பை (π) மடங்கு ஆகும். இந்த பை (π) என்பது சற்றேறக் குறைய 3.14159. பழங்காலத்தில் இதனை தோராயமாக 22/7 என்றும் குறித்து வந்தனர். பை அறிவியலிலும் பொறியியல் துறையிலும் அதிகம் பயன்படுவதால், இதனைக் கணிக்க பல சமன்பாடுகளும் தோராயமாக கணக்கிடும் முறைகளும் உண்டு.

கி.பி.400500 ஆண்டுகளில் வாழ்ந்த இந்திய அறிஞர் ஆரியபட்டாவால் கணக்கிட்ட 'பை'யின் அளவு மிகத் துல்லியமானது. கிரேக்கர்கள் வட்டத்தின் சுற்றளவை குறிக்க பெரிமீட்டர் என்னும் சொல்லை கையாள்வதால் அதன் முதல் எழுத்தாகிய பை (π) யைப் பயன்படுத்தினர். இன்றும் அனைத்து மொழிகளிலும் இவ்வெழுத்தே 'பை'யைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

'பை' நாள் என்னும் புகழ்பெற்ற கணித மாறிலி பல்வேறு நாடுகளில் பல்வேறு நாட்களில் கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் ஐரோப்பிய நாடுகளில் இன்று 'பை அப்ராக்ஸிமேஷன் டே' என கொண்டாடப்படுகிறது. பை அளவின் பின்னத்தை குறிக்கும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்க நாட்காட்டியின்படி 3/14 என்பது மார்ச் 14 ஐக் குறிக்கும் விதமாக உலக 'பை' தினம் கொண்டாடப்படுகிறது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பிறந்த நாளும் மார்ச் 14 இல் வருவது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய நாட்கணக்குகளில் ஜூலை 22 ல் பையின் பொதுவானபின்னஅளவான22/7என்பதைகுறிக்கும்வகையில் இது 'பை அப்ராக்ஸிமேஷன் டே' என கொண்டாடப்பட்டு வருகிறது. இதைத் தவிர சில இடங்களில் நவம்பர் 10 (ஆண்டின் 314வது நாள்) சீனாவின் பின்ன அளவின்படி (355/113) போன்ற நாட்களும் 'பை' தினமாக கொண்டாடப்படுகிறது. பள்ளிப்படிப்பின் கணித சமன்பாடுகளை கடந்து வந்தவர்கள் யாரும் "பை" எண்ணும் கணித மாறிலியை உபயோக்கிக்காமல் கணக்குகளை தீர்த்திருக்க முடியாது.

ஜெ. பிரேம குமாரி

